# உடன்பிறப்பே... 82


**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில்
இடம் பிடித்த தீரர்களை வாராவாரம்
இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம்.
அந்த வகையில், பெரியாரின் தொண்டராக,
அண்ணாவின் தம்பியாக, கலைஞரின்
உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம்
வளர்த்த நெல்லை ஆ.திராவிடமணி
அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# நெல்லை ஆ.திராவிடமணி

## தீரமிக்க தொண்டர் படை அமைப்பாளர்!

ஓவியம் : ரவி பேலட்



*1949*-ஆம் ஆண்டு, கழகம் தொடங்கப்பட்ட பின்னர், அப்போது கழகத்தின் ஏடான, 'மாலை மணி' கழக நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகக் கவனப்படுத்தி வந்தது, அக்டோபர் 19-ஆம் தேதியிட்ட மாலை மணியில், அக்டோபர் 2-ஆம் தேதி, கடையநல்லூர் அருகே வடநத்தம்பட்டி கிராமத்தில் கழகக் கொடியேற்றி, உரையாற்றியவர் தோழர் ஆ.திராவிடமணி என கவனப்படுத்தி இருந்தது. அடுத்த அடுத்த இதழ்களிலும் நெல்லைப் பகுதிகளில் திராவிடமணி கொடியேற்றிய நிகழ்வுகள், கழகக் கிளைகளைத் தொடங்கி வைத்த நிகழ்வுகளைப் பதிவு செய்தது.

அதற்கு, முன்னரே கடையநல்லூர் கிராமத்தில் தோழர் திராவிட மணி தி.மு.கழகக் கிளையினைத் தொடங்கி, முதன்முதலில் கருப்பு சிவப்பு இருவண்ணக் கொடியைப் பறக்க விட்டவர். தென் மண்டலத்தின் கடைக்கோடியில் கழகத்தின் முகமாகச் செயல்படத் தொடங்கிய களவீரராக பேரறிஞர் அண்ணா அவர்களால் அடையாளப் படுத்தப்பட்டவர் திராவிடமணி.

### கருஞ்சட்டைப் படை வீரர்

1946-ஆம் ஆண்டு மே மாதம், மதுரையில் தந்தை பெரியார் நடத்திய கருப்புச் சட்டை மாநாடு திராவிடர் கழக வரலாற்றில் முக்கியமானது. அந்த மாநாட்டுப் பந்தலைத்தான் சில விஷமிகள் தீ வைத்துக் கொளுத்தி, மாநாட்டை சீர் குலைக்க முயன்றனர். ஆனாலும், பெரியாரின் உள்ள உறுதி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் காட்டியது.

அந்த மாநாட்டு ஊர்வலம், மதுரை ரயில் நிலையத்தில் இருந்து, வைகையாற்றுப் பாலம் அருகே அமைக்கப்பட்டிருந்த மாநாட்டுப் பந்தல் வரை, சுமார் ஆறு மைல் தொலைவுக்கு நீண்டது. அணிவகுப்பை நடிகவேள் எம்.ஆர்.ராதாவும், பாவலர் பாலசுந்தரமும் குதிரைகள் மீது அமர்ந்து வழிநடத்தினர். இரட்டைக் குதிரை பூட்டப்பட்ட சாரட்டில் பெரியாரும், அண்ணாவும் வருகை தர, பின்னால் 20 ஆயிரம் பேர் கருப்புச்சட்டை அணிந்து, ராணுவ மிடுக்கோடு அணிவகுத்து வந்தனர். அந்த மாநாட்டின் தொண்டர் படை அமைப்பாளராக இருந்து செயலாற்றிய இளைஞர்தான் திராவிடமணி.

### காரில் வந்து கழகப் பணி

அன்றைய ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம், இன்றைய தென்காசி மாவட்டத்தில் உள்ள, கடையநல்லூரில் 1928 -ஆம் ஆண்டு பிறந்தவர் திராவிடமணி. பெற்றோர் ஆறுமுகம் – மீனாட்சியம்மாள். அன்றைய நிலையில், கடையநல்லூர் கிராமத்தில் ஆறுமுகம் செல்வாக்கு மிக்கவர் என்பதால், இயல்பிலேயே திராவிடமணி அவர்களும் அந்த வட்டாரத்தில் அறியப்பட்டவராக இருந்தார்.

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில், நெல்லை சுற்றுவட்டார கழக நிகழ்ச்சிகளுக்குச் சொந்தக் காரில் வந்து செல்லும் அளவுக்கு வசதிகளைக் கொண்டவர். அந்த கார் கட்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் என்பதுதான், அன்றைய நிலையில், அவரின் கழக ஈடுபாட்டுக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

**தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் தனது இரு கண்களாகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தமது இதயத்தில் வைத்தும் போற்றியவர் திராவிடமணி.**

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே அரசியல் உணர்வு பெற்றவர், தந்தை பெரியாரின் தொண்டராகத் தமது பொது வாழ்க்கையைத் தொடங்கியவர். கடையநல்லூர் கிராமத்தில் திராவிடர் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயல்படத் தொடங்கினார்.

தென்காசி, கடையநல்லூர் பகுதிகளில் பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கைப் பிரச்சாரங்களால் அறியப்பட்ட திராவிடமணி காலப்போக்கில் நெல்லை மாவட்ட அளவில் பெரும் பணிகளாற்றிய 'நெல்லை திராவிடமணி' என்கிற பெயருடன் அழைக்கப்படலானார்.

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில், அண்ணாவின் பக்கம் நின்று தென்மாவட்டங்களில் கழக வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தார். அந்த விவரங்களைத்தான் மாலை மணி கவனப்படுத்தி வந்தது. அன்று தொடங்கி, கழகத்தின் அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றுச் சிறை சென்றவர்.

### கழக மேடைகளில் களம்

திராவிடமணி அவர்கள் சிறந்த சொற்பொழிவாளர். நெல்லை வட்டார வழக்கில், நகைச்சுவை ததும்ப பேசும் ஆற்றல் கொண்டவர். அதே நேரத்தில் அவரது உரையில் பகுத்தறிவுக் கருத்துகள் இழையோடும். கழகத்தின் முன்னோடிப் பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அவரது உரையை பேரறிஞர் அண்ணா அவர்களே ரசித்துக் கேட்கும் அளவுக்கு இருக்கும் என்கின்றன குறிப்புகள். அந்த ஆற்றல்தான் அவர் இறக்கும் வரையில் தமிழ்நாட்டின் பட்டித் தொட்டி எங்கும் கழகத்தின் இலட்சியங்களைக் கண்ணியத்தோடு முழங்க அவரை அழைத்துச் சென்றது.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர், கலைஞரின் தலைமையை ஏற்றுச் செயல்பட்ட மூத்த முன்னோடிகளில் அவரும் ஒருவர். கழகம் சோதனைகளுக்கு உள்ளானபோது சோர்ந்து போகாமல் கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில், உறுதியாக நின்று செயல்பட்டவர்.

குறிப்பாக, ஜனநாயகத்தைக் காப்பாற்ற நெருக்கடி கால நிலையையும். 'மிசா' சட்டத்தையும் எதிர்த்து கழகம் போர்க்கொடி உயர்த்திய போது சிறையின் கொடுமைகளுக்கு ஆளானவர். பாளையங்கோட்டை சிறைக் கொட்டடிகள் கழகத்தினரை அடிக்கடி அழைத்துப் பழக்கப்பட்டவை என்பதால், மிசா காலத்தில் அவருக்கும் அங்கு கொட்டடி தயாராக இருந்தது. அந்தச் சூழலிலும் அவர் உறுதி மாறாமல் நின்றவர்.

### மேலவையில் கழகக் குரல்

தென்காசி, கடையநல்லூர் பகுதிகளில் வசித்து வந்த நெசவுத் தொழிலாளர்களின் நலனுக்கான தோளொடு தோளாக நின்றவர். சட்டமன்ற மேலவை உறுப்பினராக ஆறாண்டுகாலம் அவர் இருந்தபோது, அனைத்துப் பிரச்சினைகளிலும் கழகத்தின் கொள்கையை எடுத்து வைத்தவர். குறிப்பாக, தொழிலாளர் பிரச்சினைகளில் அதிக ஆர்வம் காட்டி அவர்களுக்காக வாதாடியவர். கழகத்தின் தொடக்க கால ஆலமரமாக இருந்தாலும், பதவி, பொறுப்புகளுக்கான எந்த ஆர்வத்தையும் காட்டாத முன்னோடியாக இருந்த திராவிட மணி அவர்களுக்கு 1992 -ஆம் ஆண்டில், கழகத்தின் முப்பெரும் விருதுகளில் பெரியார் விருது அளித்து சிறப்பித்தார், முத்தமிழறிஞர் கலைஞர். அகவை முதிர்ந்த நிலையிலும் திராவிடச் சிந்தனைகளில் ஊறி நின்று, இளைஞர்களை வழி நடத்தியவர் திராவிடமணி.

தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் தனது இரு கண்களாகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தமது இதயத்தில் வைத்தும் போற்றியவர் திராவிடமணி.

பகுத்தறிவுக் கொள்கை வழி உறுதியாக நின்று, தமிழ்மொழி, தமிழினம் காப்பதில் தளரா உறுதி கொண்டவரை கழகம் என்றும் நினைவில் நிறுத்தி வைக்கும்..

**...துடிக்கும்**

## இனமான உணர்வும் தமிழர்களும்...

இனிவரும் தலைமுறைக்கும் இனமான உணர்வு குறித்த விளக்கத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என, ஆசிரியர் – மாணவிக்குமான உரையாடலாக முகநூலில் ஒரு பதிவை எழுதியுள்ளார் தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா. அமுதரசன். அதிலிருந்து சில பத்திகள்.

”மாணவி: சார், தமிழர்கள் தீபாவளியை எதற்குக் கொண்டாடுகிறார்கள்? கிறிஸ்தவ, இஸ்லாமிய நண்பர்கள் தங்கள் மதத் தலைவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் போது, இந்துமதம் மட்டும் நரகாசுரனின் இறந்த தினத்தை ஏன் இவ்வளவு ஆடம்பரமாகக் கொண்டாடுகிறது?

ஆசிரியர்: நரகாசுரன் என்கிற கருப்பான பயங்கரமான அசுரன், பார்ப்பனர்கள் யாகம் செய்யவிடாமல் தடுத்தான். அதனால், பார்ப்பனர்களும் தேவர்களும், பகவானிடம் சென்று முறையிடவே, கிருஷ்ணர் அவதாரம் எடுத்து, நரகாசுரனைக் கொன்றாராம்.

மாணவி: இந்தக் கதையில் பார்ப்பனர்கள் என்பது யாரென்று புரிகிறது சார். பார்ப்பனர்கள் இன்றும் கூட இருக்கிறார்கள். அப்படியானால் அந்த அசுரர்கள் யார்? எங்கு இருக்கிறார்கள்?

ஆசிரியர்: புராணங்களில் வரும் வருணனைகளை வைத்துப் பார்த்தால் பெரும்பாலான அசுரர்கள் என்பவர்கள் தமிழர்கள்தான்.

மாணவி: அப்படியானால், தீபாவளி பார்ப்பனர்களின் வெற்றி விழா. தமிழர்களை வீழ்த்திய நாள் . பிராமணர்கள் தங்களைக் காத்த அந்தப் பிராமணக் கடவுளை நினைத்து, பார்ப்பனர்கள் கொண்டாடலாம்.

ஆனால், தமிழர்களான நாம் நம் தன்மானத்தை இழந்து, எப்படி தீபாவளியைக் கொண்டாட முடியும்? இது நமக்கு அவமானம் இல்லையா!

நரகாசுரனின் பிறந்த நாளை அல்லவா தமிழர்கள் விமரிசையாகக் கொண்டாடவேண்டும்.

ஆசிரியர்: நரகாசுரனின் பிறந்த நாள் தான் தெரியாதே?!

மாணவி: நரகாசுரன் இறந்த நாளைக் கண்டுபிடித்த ஆரிய வைதீக மதத்திற்கு அவரின் பிறந்த நாள் தெரியாதா? இது அயோக்கியத்தனமில்லையா? என அந்த விளக்கம் நீள்கிறது. கடந்த இரண்டு நாட்களில் பரவலாகப் பகிரப்பட்டு, கவனம் பெற்றுள்ளது இந்தப் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்





எ..ராஜேந்திரன்

### தலைவரைச் சந்தித்து வாழ்த்து!

1989-ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவுச் சங்க தேர்தலில் தஞ்சை தென்னக ரயில்வே தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது மூன்றாவது முறையாகத் தமிழ்நாடு முதலமைச்சராகி இருந்த தலைவர் கலைஞர் அவர்களை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அந்தத் தருணத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– எ.ராஜேந்திரன், 33–வது வட்டச் செயலாளர், தஞ்சை மாநகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### தஞ்சை பெரிய கோயில் உரிமை!

1968-ஆம் ஆண்டு, மாநிலங்களவையில், பேசிய கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் அவர்கள், தஞ்சாவூர் பெரிய கோயிலை தமிழ்நாட்டு அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்தார். அதற்குப் பதிலளித்த அன்றைய கல்வி அமைச்சர் ஷெர் சிங், ஒன்றிய அரசின் பழம்பொருள்துறை பாதுகாப்பு நிறுவனத்தின் பொறுப்பில் இருப்பதால், அதை தமிழ்நாட்டு அரசிடம் ஒப்படைக்க முடியாது என அறிவித்தார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

647

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.